770

g No M. 2169 III-

7-NOV MADR

# ரூரல் இந்தியா

(பாரேஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடையர்ட் டிப்டி கலெக்டர்
ஆபீஸ்: 9, பாலஸ்ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் III.] செப்டம்பர், 1928 [நெ 3

பொருளடக்கம்.


| நெ. | | பக்கம் |
|---|---|---|
| 18. | ஹரி கோபதேசம் | 47 |
| 19. | பண்டை காலத்திய கிராமப் பஞ்சாயத்துகள் | 48 |
| 20. | தென் இந்தியாவில் பழவர்க்கச் சாகுபடி | 51 |
| 21. | இந்தியாவில் வியவஸாயமுன்னேற்ற முயற்சிகள் | 54 |
| 22. | கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர் | 57 |
| 23. | தோட்டக் குப்பை எரு | 58 |
| 24. | பிரிட்டிஷ் இராஜ்ய காட்டு விஷய கன்பரன்சு | 59 |
| 25. | கிராமத் தோப்புகள் | 60 |
| 26. | மனிதர்களின் அறிவின் அளவுகளைச் சோதிப்பது | 61 |
| 27. | வர்த்தமானக் குறிப்புகள் | 64 |


Annual Subscription (inclusive of Postage)
Inland Rs. 3 : Foreign Rs 4—8—0.
Single copy, Inland As 6 : Foreign As 8.

Rural India reaches the Villages and Towns of India
It is the best medium for advertisement.

# அறிக்கை

"ரூரல் இந்தியா" சந்தாதாரர்களும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரெஸ்ட்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்கு சேர்ந்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டராகி விட்டபடியால் கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி ஷேர் தாரர்கள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ராஜகோபால ரெட்டி.

பிரஸிடெண்டு, பாரெஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு.
முகாம் :—பாலவாக்கம்

ஊத்துக்கோட்டை போஸ்ட்டு
செங்கல்பட்டு ஜில்லா.

---


**டாக்டர் 'ஜீ' பீ. என்பவரின் சுகந்த மூக்குத்தூள்**

**இதில் விலையுயர்ந்த பல வாசனைச் சரக்குகள் சேர்ந்துள்ளன**

இதை உபயோகித்தால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் சண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. கெடுதியென்பது யாதொன்றும் நேரவே நேராது. சாதா மூக்குத்தூளை 10, 15 தடவை உபயோகிப்பதைவிட இத்தூளை ஒரே ஒரு தடவை உபயோகிக்கலாம். காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால், தூள் முழுவதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல், தன் சுபாவ குணமும் காரமும் மாறவே மாறாது. இதைப் பற்றி அநேக நற்சாட்சி பத்திரங்களும் தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.



REGISTERED TRADE MARK

புட்டி ஒன்றுக்கு விலை அணா 4

**புலி மார்க்**

முதல்தரமான சாதா பட்டணம் பொடியும் விற்கப்படும்.

**குருபசவா அண்டு கம்பெனி, லிமிடெட்**

தபால் பெட்டி நெ. 510 | பார்க் டவுன்,
விலாசம் "மெடிகேடெட்" | சென்னை


சென்னை ராஜதானி பாரஸ்டு

பஞ்சாயத்தார்களுக்கு விஞ்ஞாபனம்.

நமது பாரஸ்ட்டு பஞ்சாயத்தார்களுடைய கான்பரன்சு (மகா சபை) இவ்வருஷம் டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் குண்டூர் ஜில்லாவில் நடைபெறவேண்டுமென்று, 24-9-28-தேதியில் மைலாப்பூரில் நடந்தேறிய ஜனரல் மீட்டிங்கில் நமது நண்பர்கள் அபிப்ராயம் கொடுத்தார்கள். ஆகையால், எல்லா பஞ்சாயத்து பிரசிடெண்டு அவர்களும் மிகுந்த சிரத்தையை எடுத்துக்கொண்டு தங்களுடைய பஞ்சாயத்துகளின் மெம்பர்களுக்கு தெரிவித்து, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ரூ. 2-0-0-க்கு குறையாமல் இதனடியில் குறித்திருக்கும் விலாசத்திற்கு தங்களுடைய கன்பரன்சு சந்தாபணத்தை கூடிய சீக்கிரத்தில் அனுப்பு உதவி புரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்; நம்மிட முன்னேற்றத்திற்காக இம்மாதிரி கான்பரன்சுகள் விடா முயற்சியுடன் நடத்துவதில் எல்லா பஞ்சாயத்தார்களும் மிகுந்த சிரத்தையையும் உற்சாகமும் வாய்த்திருப்பார்களென்கிற நம்பிக்கையுடன் இவ்வித முயற்சிகள் கடவுள் கிருபையால் செய்துக் கொண்டுவரப் படுகிறது.

இப்படி தங்கள் அன்புள்ள
அ. ராஜகோபாலு ரெட்டி
பாரஸ்டு பஞ்சாயத்தார்களின்
யூனியன் லிமிடெட்டு, பிரசிடெண்டு.

எல்லா பஞ்சாயத்து பிரசிடெண்டு அவர்களும் சந்தாபணத்தை அனுப்பவேண்டிய விலாசம் :—

சுங்கர் வெங்கடசுப்பா ரெட்டிகாரு,
பாரஸ்டு பஞ்சாயத்து பிரசிடெண்டு,
சீமகுர்த்தி கிராமம்,
சீமகுர்த்தி போஸ்டு,
குண்டூர் ஜில்லா:

N. B,—சந்தாபணம் கொஞ்சம் சேர்ந்தவுடனே டிசம்பர்மாதம் முதல் வாரத்தில் மஹாசபை நடைபெறும் இடமும், தேதியும் முதலியவைகள் தெரிவிக்கப்படும்.


The Magazine Press, Chingleput.

# ரூரல் இந்தியா

(பாரெஸ்ட்டு பஞ்சாயத்து பத்திரிகை)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமினாதய்யர், ரிடைர்ட் டிப்டிகலெக்டர்

ஆபீஸ்: 9, ப்ராடீஸ்ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் III.] செப்டம்பர், 1928 [நெ 3

## I. ஹிதோப தேசம்.

1. மனிதனுக்கு வயிறு அவனுடைய சுகத்துக்காக ஏற்பட்டது. அதை வற்றத் தாழ்வில்லாமல் நிதானமாக வைத்துக்கொண்டிருந்தால் அவனுக்கு யாதொரு துக்கமுமில்லை. அதற்கு உணவு கொடுக்காமல் பட்டினி போட்டால் ஆயுள் குறையும். கணக்கும் கால அளவுமின்றி உணவு கொடுத்துக்கொண்டே வந்தால் கொடிய நோய்களுண்டாய் முடிவில் மரணம் நேரிடும். இதனாலேதான்—"பாலோடாயினும் காலமறிந்துண்" என்னும் பழமொழி வழங்குகிறது.

2. நன்றாய்ப் பசித்த பின்பே உண்ணவேண்டும். பசியாததன் முன் அநேகர் உண்கிறார்கள். அதனால் வருங்கேடுகளனேகமுண்டு. குழந்தைகளுக்கு அடிக்கடி தீனிகொடுத்து அவர்களுக்குத்தீனியின் மேல் ஆசையுண்டாக்கும் வழக்கம் நம்தேசத்தவர்களிடம் மிகுதியாயிருக்கிறது. அப்படிச் செய்வது குழந்தையை வளர்ப்பதல்ல. குழந்தையைக் கொல்வதாம்.

3. நாவடக்கமானது மனிதன் மேற்கொள்ளவேண்டிய முக்கியமான குணங்களில் ஒன்று. புத்திசாலி ஒருபோதும் சமயந்தப்பிப் பேசமாட்டான். பேசவேண்டிய சமயத்தில் பேசாமலுமிரான். அவனுடைய நாவானது ஏனையருடைய பொக்கிஷத்திற்கு ஒரு சாவி போலிருக்கும்.

4. ஒரு காரியத்தை முடிப்பதன் பொருட்டு ஒன்று கூடினால் பிறகு பிரிவது கூடாது. ஒருமித்து நின்று உறுதியா

டும். அபிப்பிராய பேதமுண்டானால் அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். இடம், பொருள் ஏவல்களைச் செவ்வையாய்க் கவனிக்க வேண்டும். அப்பொழுது தான் மேற்கொண்ட காரியம் செவ்வையாய் முடிவு பெறும்.

## II. பண்டைக்காலத்திய கிராமப் பஞ்சாயத்துகள்.

[இது சிவகாசி டெப் கலெக்டர் ம-ள-ள-ஸ்ரீ பி. வி. பாலகிருஷ்ண ஐயர் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் - சாத்தூர் பஞ்சாயத்துகளின் மஹா நாட்டின் முன்பாகச் செய்த உபந்நியாஸம்.]

பண்டை காலத்திலும் மத்தியம காலத்திலும் இந்தியாவில் கிராமப் பஞ்சாயத்துகள் இராஜாங்கங்களுக்கு அஸ்திபாரங்களாக வாய்ந்திருந்தன, ஆதியில் இந்தியாவானது அநேக சிறிய இராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு இராஜ்யத்திற்கும் பிரத்தியேக அரசனிருந்துகொண்டு இராஜ்யபாரத்தை நடத்தினான். அப்படி அவன் இராஜ்யபாரத்தை நடத்துகையில் அவ்விராஜ்யங்களின் பரிபாலன முறைகளில் ஜனப்ரதிநிதி ஆக்ஷி ஏற்பாடுகளும் வழங்கியன. யுத்தக் கொழுப்பங்களினால் மேல் சொல்லிய ஜனப் பிரதிநிதி ஆக்ஷி வழிகள் பின்னடைந்துபோய் அரசர்களால் அவ்வதிகாரங்கள் கைப்பற்றப்பட்டன. மௌர்ய இராஜாங்கம் ஏற்படும் காலத்தில், அதாவது 2000 வருஷங்களிற்கு முன்பு இந்தியாவின் வடமேற்குப் பாகத்திலும் வடகிழக்கு பாகத்திலும் சிலப்பிரதேசங்களில் ஜனப்பிரதிநிதி ஆக்ஷி வழிகளிருந்தனவென்றும், யுத்தங்கள் பின்பு ஏற்பட்டமையால் அரசர்களின் அதிகாரங்கள வலுத்தனவென்றும், அதேகாரணத்தினால் ஜனப்பிரதிநிதி ஆக்ஷிமுறை அதிகாரமானது அரசர்களின் அதிகாரங்களுள் சேர்ந்தனவென்றும் அறியப்படுகிறது. ஆனபோதிலும், கிராம நிர்வாஹ வழிகளில் ஜனப்பிரதிநிதி ஆக்ஷி முறைகள் கைக்கொள்ளப்பட்டனவென்றும் தெரியவருகிறது. ஆகவே, பண்டை காலத்தில் இந்தியாவில் அரசர்களுடைய ஆட்சியுடன் ஜனப்பிரதிநிதி ஆக்ஷியும் வழங்கிற்று. இயல்பில் அவ்விரண்டு முறைகளும் ஒன்று சேர்ந்து இருக்கக்கூடாதவைகளாக விருந்தபோதிலும், இந்தியாவில் பண்டைகாலத்தில் அவைகள் அநுஷ்டிக்கப்பட்டு வந்தனவென்பது ஆச்சரியத்தை உண்டுபண்ணக் கூடியதே. மேநாட்டுச் சரித்திரக்காரர்களுள் சிலர் கிழக்கு தேசங்களிற்குத் தெரிந்த இராஜாங்கமுறை அரசர்களுடைய ஆக்ஷி முறை யொன்றேயென்றும், மற்றவர்கள் அர

199375



சர்களின் ஆக்ஷிவழி இராஜாங்கங்களுள் கொஞ்சமான பிரதேசங்களில்தான் அநுஷ்டிக்கப்பட்டது மிச்சப் பிரதேசங்களில் ஜனப்பரதிநிதி ஆக்ஷி முறைதான் அநுஷ்டிக்கப்பட்டதென்றும் மொழிகிறார்கள். இவ்விரண்டு மொழிவுகளும் சரியானவைகளல்ல. ஹிந்துக்களின் இராஜீயதத்துவங்கள் இராஜாங்கங்களின் பிரதானஸ்தாபனங்களில் அரசர்களின் அதிகார வழியையும் கிராமாந்தரங்களில் பூரணமான அதிகாரங்களை வஹித்த ஜனப்பிரதிநிதி ஆக்ஷி வழியையுங் கொண்டன. இவ்விரண்டு ஆக்ஷி முறைகளும் இந்தியாவில் வெகு வெகு காலம்வரையில் ஒன்றுக்கொன்று விரோதமாயில்லாமல் ஒத்து நடந்துகொண்டே நடைபெற்றன. அரேபியர்களும், பெர்ஷியர்களும். நம்முடைய தேசத்துக்கு வந்தது முதல் இவ்வித இராஜாங்கவழி சீர்குலைந்தது. ஈஸ்டு இந்தியா கம்பனியார் வந்தபின் இவ்வழிக்கு அழிவும் ஏற்பட்டது. அநேக யுத்தங்களும் அந்நியர்களுடைய படையெடுப்புகளும் அக்காலங்களில் ஏற்பட்டபோதிலும் கிராமங்கள் தங்களுடைய விஷயங்களை எப்போதும்போல் கவனித்துவந்தன. ஜனப்பிரதிநிதி ஆக்ஷி வழிகளை அவைகள் கைவிடவேயில்லை. யுத்தங்களினாலும் படையெடுப்புகளினாலும் சுவல்பகாலங்களுக்கு அசௌகரியங்கள் நேரிட்டிருந்தபோதிலும், கிராம பஞ்சாயத்துகள் அவ்விபத்துகள் நீங்கின உடனே முன்போல் கிராமயோக க்ஷேமத்தில் தீர்க்கமான முயர்ச்சியில் அமைந்தன, ஜனப்பிரதிநிதி ஆக்ஷிவழிகள் முன்போலவே நடைபெற்றன. மேலும், யுத்தங்கள் எவ்வளவு தீங்குகளை தேசத்திற்கு விளைத்திருந்தபோதிலும் கிராமங்களின் ஜனப்பிரதிநிதி ஆக்ஷி எப்போதும்போலவே நடைபெற்று ஜீவித்துவந்தது. இந்த ஆக்ஷிமுறையை அநுஷ்டிக்கிற ஸ்தாபனமாகிய கிராமப் பஞ்சாயத்து இந்திய நாகரீகத்தை காப்பாற்றுவதில் அளவில்லாத ஊழியத்தைச் செய்திருக்கிறமையால் அது சரிவர கவனிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டால் அது நம்முடைய தேசோத்தாரணத்தைச் செய்து தேசக்ஷேம நிலையையுயர்த்து மென்பதில் யாதொருசந்தேகமுமில்லை. பிரிடிஷ் பார்லிமெண்டார்காளவில் இந்தியாவில் ஜனங்களுக்கு உத்திரவாதம் வஹிக்கக்கூடிய துரைத்தன முறையை யேற்படுத்துகிறது தான் தங்களுடைய நோக்கமென்று பிரகடனம் செய்திருக்கிறபடியால், அவ்வித இராஜாங்கவழி சரியாய் ஏற்பட்டு நடைபெறவேண்டிய நிமித்தம் இந்திய ஜனங்கள் பஞ்சாயத்துகளை தக்கபடி நிர்வஹித்து பயிர்ச்சியை யடையவேண்டுமென்பது முக்கியமான விஷயம். கிராம ஜனங்கள் பஞ்சாயத்துகளின் மூலமாகத்தான் உத்திரவாத

ஆக்ஷிமுறையில் பயிற்சியை நன்றாய் அடையக்கூடுமாதலால் கிராமப் பஞ்சாயத்துகள் தக்க ஏற்பாடுகளுடன் புனருத்தாரணம் செய்யப் படவேண்டும்,

ஜனங்கள் எல்லோருக்கும் ராஜ்ய ஞானமும், யோக்கியதையும் அமைந்திருந்தால்தான் ஜனப்பிரதிநிதி ஆக்ஷி வழிகள் ஒரு தேசத்தால் கைப்பற்றப்படக்கூடும். உத்திரவாத ஆக்ஷிமுறையில் ஞானத்தையும் சிரத்தையையும் வாக்காளர்கள் வஹிக்கவேண்டும்.

வாக்காளர்களும் ஜனங்களும் உத்திரவாத ஆக்ஷிமுறை வழிகளில் ஞானத்தையும், சிரத்தையையும் வஹிக்காவிடில் மூடர்களாக விருந்துகொண்டு தலைவர்களின் சொல்படியே நடப்பார்களாகையால் அவ்வுத்திரவாத ஆட்சி முறையானது பெயருக்குமாத்திரம் அவ்வித ஆட்சிமுறை யாகுமே யொழிய, வாஸ்தவத்தில் அது உத்திரவாத ஆட்சி யாகாது, இதலியின் ஜனப்பிரதிநிதி ஆட்சியானது முஸ்ஸலோனி ஏற்படுவதற்கு முன் இங்கிலாந்தின் இராஜாங்க முறையை யொத்ததாக விருந்து அவர் அதிகாரத்திற்குவந்த பின்பு இதலியின் இராஜாங்கமுறை ஒருவனே எல்லா அதிகாரங்களையும் வஹித்த ஆட்சிமுறையாக ஆகிவிட்டது. பிரான்சு தேசத்தில் ரெவல்யூஷனிற்குப் பின்பு ஜனப்பிரதிநிதி ஆட்சிவழிகள் அளவிற்குமேல் ஸ்தாபிக்கப்பட்டமையால் டிக்டேடர் என்கிற சர்வாதிகாரங்களை வஹிக்கக்கூடிய தலைவரை ஜனங்கள் வேண்டினார்கள். ஜனங்களும், வாக்காளர்களும் உத்திரவாத ஆட்சிமுறையில் ஞானத்தை சரியாக வஹித்து இராஜாங்க விஷயங்களில் கவனத்தையும்,சிரத்தையையும் செலுத்தியிருந்தால் இவ்வித கோளாறுகளிற்கு இடம் ஏற்பட்டிருக்காது. தவிரவும், வாக்காளர்கள் ஏகோபித்து வியவஹரிக்கவேண்டும். அவர்கள் அபிப்பிராயங்களை வெளியிடாமல்போனால் ஜனப்பிரதிநிதி ஆட்சிவழிகள் சீர்குலைந்து போய்விடும்.

பஞ்சாயத்துகள் சரிவர நடத்தப்பட்டால் அவைகளின் நிர்வாஹத்தினால் ஜனங்களுக்கு ஏற்படும் ஞானமும் அனுபவமும் சட்டசபைகளை நடத்துவதில் அவர்களுக்கு உபயோகமாகும். சட்டசபைகளின் மூலமாகத்தான் உத்திரவாத ஆட்சிமுறை நடைபெறவேண்டியதாக விருக்கிறபடியால் பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்தினால் ஏற்படக்கூடிய ஞானமும், அநுபவமும் தேசநன்மையின் பொருட்டு வெகு முக்கியமானவைக ளென்பதிற் சந்தேகமே யில்லை. தேறுதல்



களில் வாக்காளர்கள் அபேக்ஷகர்களின் நிர்வாஹ யோக்கியதையொன்றையே கவனிக்கவேண்டுமே யொழிய அவர்களுடைய ஜாதி, வகுப்பு, கட்சி இவைகளை கவனிக்கக்கூடாது. அப்படிப்போலவே இராஜீயக் கட்சிகளில் சேரவேண்டிய வழியில், அவர்கள் எந்த கட்சியால் தேசத்திற்கு நன்மையேற்படக்கூடுமோ அதில்தான் சேரவேண்டும். தேறுதல்களின் மூலமாக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் சரிவர ஊழியம் செய்யாத பக்ஷத்தில் வாக்காளர்கள் அடுத்த தேறுதல்களில் அவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடாது.

கிராமப் பஞ்சாயத்துகளால் கிராமாந்தர அபிவிருத்தி முயற்சிகள் நடத்தப்படக்கூடும். மனுஷிய பலம் அவைகளுக்கு தேவையான மட்டிலிருக்கிறது. வியவஸாயம், தொழில் இவைகளை விருத்தி செய்து தேசக்ஷேம நிலையை அவைகள் உயர்த்தக்கூடும். தற்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மாத்திரம் தேசோத்தாரண முயற்சிகளைச் செய்து வருகின்றன. பஞ்சாயத்துகளும் அப்படிப்போலவே வேலை செய்தால் அளவில்லாத க்ஷேமம் தேசத்திற்கு ஏற்படும். கவர்மெண்டின் ஒத்தாசையே எல்லா வழிகளிலும் கிராமத்தார்கள் அபேக்ஷிக்கக்கூடாது. பஞ்சாயத்துகள் தங்கள் முயற்சிகளுக்கு வேண்டிய எல்லாவித பலங்களுக்கும் மூலங்களை உடைத்தாயிருக்கின்றன.

## தென் இந்தியாவில் பழவர்க்கச் சாகுபடி.

நீலகிரியில் வியவஸாய இலாகாவானது மூன்று தோட்டங்களில் பழச் செடிகளைப் பயிர்செய்து வருகிறது. கூனூரில் ஒன்றும், பர்லியாரிலொன்றும், கல்லாரில் ஒன்றுமாக இருக்கின்றன. கூனூர் தோட்டமானது சமுத்திர மட்டத்திற்குமேல் 5800 அடி உயரத்தில் இருக்கிறது. அதில் குளிர்தேசத்து பழச் செடிகளாகிய ஆப்பில்கள், பேர்சுகள், பிளம்ஸ், ஆரஞ்சு, எலுமிச்சை இவைகள் பயிரிடப்படுகின்றன. தென் இந்தியாவில் மலைப்பிரதேசங்களில் எவ்வகை குளிர்தேசப் பழவர்க்கச் செடிகளும் பயிர் செய்யப்படக்கூடும். சமுத்திரமட்டத்திற்குமேல் 2500 அடி உயரமான பர்லியார் தோட்டத்தில் உஷ்ணதேச பழச்செடிகளாகிய, ஏலக்காய் ஜாதிக்காய், லவங்கம், மாமரம் இவைகள் பயிர் செய்யப்படுகின்றன. 1400 அடி உயரமான கல்லார் தோட்டத்தில் மங்குஸ்[illegible] ஸ[illegible]டா, ஆரஞ்சு, அனசி, பப்ளி இவைகள் பயிர் செய்யப்படுகின்றன.

199375

## கிராமாந்தர புனருத்தாரண முயற்சிகள்.

சென்னை மாகாணம் கூட்டுறவு ஐக்கியமானது வருஷந்தோறும் கூட்டுறவு விஷய போதனைக்காக ஒரு கல்விச்சாலையை அமைத்து நடத்துகிறது. அந்தக் கல்விச்சாலையால் அநேக மாணவர்கள் கூட்டுறவு விஷயங்களில் ஞானத்தை யடைந்து பரீக்ஷைகளில் தேறிவந்திருக்கிறார்கள். தேறிவந்திருக்கிறவர்களில் சிலர் சர்க்காரின் கூட்டுறவு இலாகாவில் உத்தியோகம் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஜில்லா கூட்டுறவு ஐக்கியங்களும் போதகசாலைகளை இம்மாதிரியே அமைத்து வருகின்றனவென்றும் தெரிய வருகிறது. கிராமப் பஞ்சாயத்தார்களும், பாரெஸ்டு பஞ்சாயத்தார்களும் இப்போதகசாலைகளில் சேர்ந்து கல்வி முறையை யநுஷ்டித்தால் கிராமாந்தரங்களில் அவர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களை சரிவர நடத்தக்கூடும்.

இதுபோலவே கிராமாந்தரப் புனருத்தாரண முயர்ச்சிகள் தக்கபடி எல்லாவிடங்களிலும் திருப்தியாக நடைபெறவேண்டியநிமித்தம் போதகசாலைகள் ஏற்படவேண்டும். சென்னைக் கல்வி இலாகாவின் அதிகாரிகள் பள்ளிக்கூடங்களில் இவ்விதபோதனைகளை அநுஷ்டிக்க வேண்டும். சென்னை சர்வகலாசாலையும் உயர்வு கல்வி முறைகளில் இவ்விஷயங்களைச் சேர்க்கவேண்டும். ஜில்லா போர்டுகளும், தாலூகா போர்டுகளும், யூனியன் போர்டுகளும், பிரத்தியேக போதக சாலைகளை நடத்தி ஜனங்களுக்கு நிரூபணங்களுடன் ஞானத்தைப் புகட்ட வேண்டும். கிராமாந்தர ஜனங்கள் விவேகத்தை யடைந்து கடவுளிடத்தில் பக்தியைச் செலுத்தி, எல்லோரும் ஒரே கடவுளுடைய குழந்தைகள் என்பதை நம்பி, நல்லொழுக்கத்தைக் கைப்பற்றி சமூக வாழ்வின் சுகத்தை யறிந்து, சமூக உணர்ச்சியோடு நடந்து, கிராமச் சுகாதார நிலையை யுயர்த்தி, கூட்டுறவை அநுஷ்டித்து, வியவஸாயத்தையும் தொழில்களையும் விருத்திசெய்து நடந்துகொண்டாலொழிய கிராமப் புனருத்தாரணம் திருப்திகரமாக ஏற்படாது. ஆகவே, கிராமப்புனருத்தாரண போதனைமுறையில் மேற்சொல்லிய விஷயங்களெல்லாம் கைக்கொள்ளப்படவேண்டும்.

கல்விச்சாலைகளின் மாணவர்கள் சகல சௌகரியங்களுடன் கூட்டம் கூட்டமாக கிராமங்களிற் சென்று நிரூபணங்களை நடத்தி போதனைகளைச் செய்யவேண்டும். விளக்குப் படங்களுடன் அவர்கள் உபந்நியாஸங்களை நடத்தவேண்டும். நம்முடைய பத்திரிகையில், முன்



சஞ்சிகைகளில் பலதேசங்கள் இவ்விதமாக முயற்சிகளையநுஷ்டித்துச் செல்வ நிலையை உயர்த்திக்கொண்டதை விவரித்திருக்கிறோம். டென்மார்க்கிலும், இதலியிலும், ஐர்லாந்திலும் ஐக்கிய நாடுகளிலும் இவ்வித முயற்சிகள் விடாமல் அநுஷ்டிக்கப் பட்டதில் ஜனங்கள், விவேகத்திலும், சுகத்திலும், செல்வத்திலும் உயர்ந்து ஓங்கியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறோம். ஐக்கிய நாட்டில்போலவும், ஐர்லாந்தில்போலவும் நமது நாட்டில் சிறந்த தேசாபிமானிகள் பிரமசாரங்களைச்செய்து, தேசபக்தியை ஜனங்களிற்கு ஊட்டி அவர்கள் கிராமப் புனருத்தாரண உணர்ச்சியை வலுவித்து முயற்சிகளை இடைவிடாமல் செய்யும்படிச் செய்யவேண்டும். இந்தியாவில், பழய இராஜாங்கங்கள் கிராமங்களில் ஜனங்கள் சகல சௌகரியங்களையுமுடைத்தாயிருக்க வேண்டியதற்காக, தொழிலாளிகளும் இதர ஊழியர்களும் கிராமங்களிலேயே வாஸமாக இருந்துகொண்டிருக்கவேண்டிய நிமித்தம் அவர்களுக்குக்கிராமங்களில் மானியங்களைக்கொடுத்து ஆதரித்து வந்தன. கிராமங்களில் கொத்தன், கொல்லன், தச்சன், தட்டான், வாணியன், தலையாரி, வெட்டியான், பரிஹாரி இவர்கள்மானியங்களை வைத்துக்கொண்டு கிராம வாஸிகளுக்கு ஊழியங்களைச் செய்துகொண்டு கிராமங்களில் வஸித்துக்கொண்டிருந்தார்கள். கிராமங்களில் பிராம்மணர்களும், பூசாரிகளும், ஜோஸ்யர்களும், ஓசன், பணிச்சவன் முதலானவர்களும் மத ஆசார விஷயங்களின் சம்பந்தமாய் கிராமத்தவர்களுக்கு உதவுவதற்காக மானியங்கள் கொடுக்கப்பட்டு வஸித்தனர். வியவஸாயவழிகளிலும், இதர முயற்சிகளிலும், மாமூல் என்பதே சட்டமாக விருந்துகொண்டு கட்டாய முறைகளை நடத்தியது. கிராமஜனங்கள் வியவஹாரங்களையும் சமூகத்தைக் கொண்டே தீர்த்துக்கொண்டார்கள், கிராமங்கள் சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்த ஜனங்களுடன் ஜீவித்துக்கொண்டிருந்தன.

ஆங்கிலேயர்களின் ஆட்சி ஏற்பட்டதுமுதல் கிராமங்களில் இவ்வேற்பாடுகள் அழிந்துபோயின. கிராமங்கள் க்ஷீணதசையை யடைந்திருக்கின்றன. அவைகள் முன்போல் வாழவேண்டுமானால் அவைகள் சரியானபடி நிர்மாணிக்கப்படவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில், மைசூர் எகனமிக் ஜர்னலில், மிஸ்டர் பி. எஸ். சூர்யநாராயண எழுதுவதை எல்லோரும் நன்றாய் கவனிக்கவேண்டும். பி. எஸ். சூர்ய நாராயண அவர்கள் அந்த ஸமஸ்தானத்

தில் கிராமப் புனருத்தாரண ஊழிய உத்தியோகஸ்தர், கிராமங்களில் எங்கே பார்த்தாலும் ஜனங்கள் ஏழமை ஸ்திதியிலிருப்பதும், அவர்களின் அவிவேகமும், பிடிவாதமும் கிராமப் புனருத்தாரண முயற்சிகளுக்கு இடையூறுகளாக விருக்கின்றன வென்றும், கிராமங்களுக்கு உபாத்தியாயர்களும், உத்தியோகஸ்தர்களும், லாயர்களும் இதரர்களும் தேசபக்தியோடு கூட்டம் கூட்டமாக வாரத்திற்கு ஒருவிசை குறிப்பிட்ட கிழமைகளிற் சென்று தளராமல் இம்முயற்சிகளைச் செய்யவேண்டும் என்றும், மேலும், ஒவ்வொரு ஜில்லா போர்டு மெம்பரும், கவுன்சில் மெம்பரும், ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தைச் சரியான நிலையில் கொண்டு வருவதின்பொருட்டு கவனத்தைச் செலுத்தி உழைக்கவேண்டும் என்றும், 6 மாஸ பரியந்தம் அவர்கள் அந்தந்த கிராமத்திலிருந்து ஊழியம் செய்வார்களாகில் கிராம முன்னேற்ற முயற்சிகள் பயன்படக் கூடுமென்றும், கவர்மெண்டாரும், ஸர்வகலாசாலையாரும் மாணவர்களுக்குப் பட்டங்களை யளிக்கிறதற்கு முன்னே அவர்களை கிராமங்களில் ஒரு வருஷ காலமாவது வஸித்து கிராமச் சீர்திருத்த வேலையைச்செய்யும்படிக் கட்டாயப்படுத்தவேண்டுமென்றும், அவர்கள் வருஷந்தோறும் சம்பளம் கொடுத்து 6 ஊழியர்களை கிராம முன்னேற்ற வேலைக்கு அனுப்பவேண்டுமென்றும் கூறுகிறார், மேற்சொல்லிய யோசனைகளை நமது பத்திரிகையில் அடிக்கடி மொழிந்திருக்கிறோம். அவைகளை அதிகாரிகளும் ஜனங்களும் தாமதமில்லாமல் கைக்கொண்டு இடைவிடாமல் அநுஷ்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

## இந்தியாவில் வியவஸாய முன்னேற்ற முயற்சிகள்.

இந்தியா கவர்மெண்டின் வியவஸாய நிபுணரால் வெளியிடப்பட்ட இந்தியா தேச வியவஸாய முயற்சிகளைப்பற்றிய 1926-27 வருஷத்திய வருஷாந்தரப் பிரகடனம் நமக்குச் சேர்ந்தது. வியவஸாய நிபுணராகிய மிஸ்டர் கிளொவ் வுஸ்டன் வியவஸாயம் முன்னேற்றத்தை நம்முடைய தேசம் அடைவதற்கு ஆராய்ச்சி வேலை நிரம்ப நடைபெற வேண்டுமென்று கூறுகிறார். ராயல் கமிஷனர்களும் இவ்வாறே அவர்களுடைய ரிபோர்டில் கூறியிருக்கிறார்கள். ஆராய்ச்சி விஷயமாய்ச் செலவிடப்படும் பணமானது வீண் போகிறதில்லை. அவைகள் உற்பத்தி உயர்வதற்குக் காரணங்களா யிருக்கின்றன. மேலும், வரிப்பண மொத்தத்தில் கவர்மெண்டார் ஆராய்ச்சி விஷயமாக செலவழிக்கும் பணம் 100-க்கு 1-க்குமேல்படவில்லை. ஆகவே, கவர்மெண்டார் ஆராய்ச்சி விஷயத்தில் மேற்பட்ட பணத்தைச் செலவழித்து, வியவஸாயத்தை உயர்த்திக் கோடியானகோடி இந்திய ஜனங்களுக்கு க்ஷேமத்தை யுண்டுபண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.



1926-27-ம் வருஷத்தில் நெல்பயிர் முயர்ச்சிகளில் வியவஸாய இலாகாக்காரர்கள் கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். உற்பத்தியும், தான்யங்களின் ஒழுங்கும் திருப்திகரமாக ஏற்பட்டன. அதுபோலவே, கோதுமை, பருத்தி, கரும்பு, நிலக்கடலை, ஜூட், புகையிலை, தேயிலை, காப்பி, ரப்பர் இவைகளின் சம்பந்தமான பயிர் முயர்ச்சிகளிலும் அவர்கள் கவனத்தைச் செலுத்தி யிருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் கரும்புவகையுற்பத்தி ஸ்தலத்தில் கரும்பு தினுசுகள் ஏராளமாய் உண்டாக்கப்பட்டன. அவ்வுற்பத்தி ஸ்தலத்தின் நிமித்தமாக கவர்மெண்டாருக்குச் செலவு ½ லட்ச ரூபாய்தான். ஆனால், அந்த ஸ்தலத்தில் உண்டாக்கப்பட்ட தினுசுகளை பயிர்செய்ததால் பயிரிடுவோருக்குக் கிடைத்த மொத்தலாபம் 73 லக்ஷ ரூபாய்கள் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. வெள்ளைச் சக்கரையின் உற்பத்தியும் நம்முடைய தேசத்தில் அதிகரித்திருக்கிறது.

மாட்டு விருத்தி விஷயம் நன்றாகக் கவனிக்கப்பட்டது. மாகாணங்களில் மாடுகளின போஷண விஷயமும், மாடுகளை விருத்திசெய்கிற விஷயமும் சரிவர கவனிக்கப்பட்டது. மாட்டு தினுசுகளின் குணவிசேஷங்களும், இயல்பும் சரிவர கவனித்து அறியப்பட்டு, சினைக்கு மாடுகள் பொருக்கப்பட்டு சினைக்கு விடப்பட்டன. மாட்டு விஷய முயற்சிகளில் மாகாணங்களுக்கு உபயோகப்படவேண்டிய நிமித்தம் இந்தியா கவர்மெண்டார் பெங்களூரில் முக்கிய மாட்டு விருத்திசாலை யொன்றை அமைத்திருக்கின்றார்கள். அந்த ஸ்தாபனத்தில் பால் வஸ்துக்களும் தயாரிக்கப்படுகின்றன. பெங்களூர் ஸ்தாபனமானது வெகு உபயோகமான முயர்ச்சிகளை கைக்கொண்டு வருகிறது. சிறப்புவாய்ந்த வைஸ்ராய் அவர்கள் அந்த ஸ்தாபனத்தை 1927-ம் வருஷம் ஜூலை மாதத்தில் பார்வையிட்டார். மாட்டு விருத்தி முயர்ச்சிகள் ஹொசூரிலும், சிந்தலதேவியிலும், குண்டூரிலும் நடைபெருகின்றன. ஹொசூரிலும், காங்கயத்திலும் சினைக் காளைகள் விருத்தி செய்யப்படுகின்றன, சிந்தலதேவியில் ஒங்கோல் ஜாதி மாடுகள் விருத்தி செய்யப்படுகின்றன. குண்டூரில் எருமை விருத்தி முயர்ச்சிகள் நடை பெருகின்றன.

பயிர்த்தொழிலின் சம்பந்தமாக, வியவஸாய ரஸாயன சாஸ்திர விஷயங்களிலும் வியவஸாய இலாகாவால் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. மண்களில் நைட்ரேட்டுகள் செய்யும் வேலைகளைப்பற்றியும்,

மண்களின் ஈரக்கிரஹண சக்திகளைப்பற்றியும், மண்களிற்கு எருக்களைச் சேர்த்துப்போடுகிற விஷயங்களைப் பற்றியும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. எருக்கள் எவ்விதமாக உற்பத்தியாகிற தான்ய குண விசேஷங்களை மாற்றுகின்றன வென்பதைப்பற்றியும், நெய் சம்பந்தமாக கலப்புகளைக் கண்டு பிடிக்கிற விஷயங்களைப்பற்றியும், ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

கோயம்புத்தூரில் தோட்டக் குப்பை கலப்பு எருவைத் தயாரிக்கிற முயர்ச்சிகள் பயன்பட்டிருக்கின்றன. அம்முயற்சிகளின் சம்பந்தமாக நிரூபணங்கள் வியவஸாயிகளுக்குச் செய்யப்படக்கூடும். குப்பை வஸ்துக்கள் மாட்டு மூத்திரம் கலக்கப்பட்டு அழுகவைக்கப்பட்டதால் ஏற்பட்ட எரு சாணி எருவைப்போலவே அமைகிறதென்று அறியப்பட்டது. பயிர்களுக்கு இப்படித் தயாரிக்கப்பட்ட எரு உபயோகப்படுத்தப்பட்டதில் அது சாணி எருவைப் போலவே அமைந்து பயனைக் கொடுத்ததென்று அறியப்பட்டது. சாணி எரு, மேற்சொல்லிய கலப்பெரு, இவைகளிலுள்ள எருவம் சம்பயிர்களின் தான்ய உற்பத்தியையும் குண விசேஷத்தையும் உயர்த்துகிறதென்றும் அறியப்பட்டது.

வியவஸாயிகள் கூட்டுறவு வழிகளை அநுஷ்டித்தால்தான் அவர்கள் சரியானபடி லாபங்களை அடையக்கூடுமென்பதை அவர்கள் இன்னமும் அறியாமலிருக்கிறார்கள். ராயல் கமிஷனர்களும் அவர்கள் கூட்டுறவு வழிகளை யநுஷ்டிக்க வேண்டுமென்றே வற்புறுத்திக் கூறுகிறார்கள். உற்பத்தி சம்பந்தமாகவும், விற்பனை சம்பந்தமாகவும் உண்டான சில கூட்டுறவு சங்கங்கள் சரிவர வேலை செய்யவில்லையென்பது வாஸ்தவம்தான். ஆனபோதிலும், சிலசங்கங்கள் திருப்திகரமாகவே வேலைசெய்திருக்கின்றனவென்பது நமக்கு தைரியத்தைக் கொடுக்கிறது. சரியாக வேலைசெய்யாத சங்கங்கள் திறமையற்றவர்களால் நிர்வஹிக்கப்பட்டமையால்தான் சரிவர வேலை செய்யவில்லை. கூட்டுறவு விஷயங்களை வியவஸாயிகள் அநுஷ்டித்தால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய மூலதனங்களை எளிதில் சுவல்ப வட்டி ஏற்பாட்டில் அடைவதோடு சரியானவருமானங்களையும் அடைவார்கள். ராயல் கமிஷனர்களின் ரிபோர்டின் தீர்மானங்களை கவர்மெண்டார் சீக்கிறத்தில் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.



வியவஸாய முன்னேற்றத்திற்காக ஆராய்ச்சிகள் நடந்தால் மாத்திரமே போதாது. அவ்வாராய்ச்சிகளின் சம்பந்தமாக வியவஸாயிகளுக்கு நிரூபணங்கள் நடத்திக் காட்டப்பட வேண்டும். இவ்வித நிரூபணங்களை கிராமங்களில் நடத்துவதற்காக அநேக ஏற்பாடுகள் வருஷா வருஷம் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. சில மாகாணங்களில் விளக்குப்படக் காக்ஷிகளைக் காட்டுகிறார்கள். நிரூபணங்களையும் காக்ஷிகளையும் கிராமங்களில்ச் சென்று நடத்துவதற்காக ஸினிமா ஏற்பாடுகளுடன் கூடிய பிரயாண வண்டி ஏற்பாடு நம்முடைய மாகாணத்திலும் ஏற்படப்போகிறது. வியவஸாய முன்னேற்றத்திற்காகப் பூஸா ஸ்தாபனமும், மாகாண வியவஸாய போதனை சாலைகளும் அளவில்லாத வேலைகளைச்செய்கின்றன. ஆனபோதிலும், இவைகளாலேயே வியவஸாய விருத்தி நம்முடைய தேசத்திற்குச்சரிவர ஏற்படக்கூடியதல்ல, பிரதி மனிதனும் வியவஸாய ருசியைவஹிக்கவேண்டும். எல்லா பள்ளிக்கூடங்களிலும் சிறிய தோட்டங்களை அமைத்து வியவஸாய அநுபவமுள்ள ஒரு உபாத்தியாயரை வைத்து வியவஸாய போதனைகளைப்பிள்ளைகளுக்குச்செய்து அவர்களை அத்தோட்டங்களில் வியவஸாய முயர்ச்சிகளைச் செய்யச் சொன்னால் அவர்கள் வியவஸாய ருசியை ஆவலுடன் பின்பற்றத்தொடங்கி வயது வந்த பின் வியவஸாயத்தையே முக்கிய தொழிலாக வைத்துக்கொள்வார்கள். இப்படி ஜனங்கள் வியவஸாயத்தை அப்பியாஸிக்க ஆரம்பித்தால் நம்முடைய தேசத்தின் செல்வ க்ஷேம நிலை உயரும்,

## கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்.

கிராமப் பள்ளிக்கூடங்கள் கிராமச் சீரமைப்பு முயற்சிகளுக்கு அவசியமானவை; அப்படிப்போலவே, அவைகளில் போதனைகளை நடத்தும் உபாத்தியாயர்களும் அம்முயற்சிகளுக்குத் தேவையானவர்கள். கிராம ஜனங்களின் நன்மைக்குப் பாடுபடத் தகுந்தவர்கள் கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள்தான். ஆகவே, இவ்வித முயற்சிகளை அவர்கள் திருப்திகரமாக நடத்த வேண்டியதற்கு அவர்கள் பயிற்சி செய்யப்படவேண்டும். எந்தெந்த உபாத்தியாயர்கள் கிராமாந்தர ருசியை வஹித்து, கிராமாந்தர க்ஷேமத்தில் கருத்துக் கொண்டவர்களாயிருந்து, கிராமாந்தர விஷயங்களை அறிந்தவர்களாயிருக்கிறார்களோ, அவர்களதான் கிராமாந்தரச் சீரமைப்பு முயர்ச்சிகளை நடத்துவதற்குத் தகுந்தவர்களாவார்கள். கிராமப் பள்ளிக்கூட

உபாத்தியாயர்கள் தங்களை கிராம ஜனங்களோடு கிராம ஜனங்களாக எண்ணி அவர்களின் சமூக வாழ்விலும், பண்டிகைகளிலும், கொண்டாட்டங்களிலும், உற்சவங்களிலும், கலந்துகொண்டு வஸிக்கவேண்டும். கிராமங்களிலுள்ள தேவாலயங்களில் பூஜைகள் சரிவர நடக்கவேண்டிய விஷயத்தையும், மான்யங்களையுடைத்தானவர்கள் கோயில்களுக்குச் செய்யவேண்டிய ஊழியங்களைச் செய்து வருகிறார்களாவென்பதையும், அவர்கள் கவனித்து வரவேண்டும். உற்சவ காலங்களில் அவர்கள் கிராம ஜனங்களைக் கூட்டிவைத்து கல்வி இலாகா, வியவஸாய இலாகா, கூட்டுறவு இலாகா, சுகாதார இலாகா, மாட்டு வைத்திய இலாகா, இவ்விலாகாக்களின் உத்தியோகஸ்தர்களை வரவழைத்து, அவர்களைக்கொண்டு அவரவர்களுடைய இலாகாவைச் சம்பந்தப்பட்ட விஷயங்களில் உபந்யாஸங்களையும், நிரூபணங்களையும், நடத்திவைக்கவேண்டும். அக்காலங்களில் ஜனங்களை அவர்கள் வாலாயமாய் அநுஷ்டிக்கிற விளையாட்டுகளை அநுஷ்டிக்கும்படி செய்யவேண்டும். தவிரவும், அவர்கள் பள்ளிக்கூடங்களில் சிறிய தோட்டங்களை அமைத்து மாணவர்களை வியவஸாயவேலையைச் செய்யச் சொல்லவும் வேண்டும். இப்படி மாணவர்கள் வர்ணவித்தியாஸங்களை மறந்து ஒன்றுசேர்ந்து வேலைசெய்து செடிகளை வளர்த்துக் காய்களையும், கனிகளையும், புஷ்பங்களையும் விளைத்து ஆனந்தத்தைக் கொள்வார்களாகில், அவர்கள் வியவஸாயத்திலும், நிலத்திலும் ஆசையைக் கொள்வார்கள். கிராம உபாத்தியாயர்கள் கிராமத்தில் உள்ள வயது வந்தவர்களுக்கும் இராக்காலங்களில் போதனைகளை அநுஷ்டிக்க வேண்டும். அதற்காக, அவர்கள் கவர்மெண்டு கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களிடத்தில் சொல்லி இராப் பள்ளிக்கூடங்களையும், கிரந்த சாலைகளையும் ஏற்படுத்தவேண்டும்: இராப் பள்ளிக்கூடங்களில் நல்லொழுக்கங்களை போதிக்கக்கூடிய புராணக் கதைகளை உபந்யஸிக்கவேண்டும். அவ்விடங்களில் நாடகங்களும், பஜனைகளும் அவர்கள் நடத்தக்கூடும். கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் கிராமச் சுகாதார வழிகளிலும் பாடுபடக்கூடும். நல்லஜல ஜலாசயங்கள் அசுத்தப்படாமலிருக்கும்படியாகவும், எல்லோரும் சுத்தமாகயிருக்கவேண்டிய நிமித்தமாகவும், அவர்கள் ஜனங்களுக்கு உபதேசித்து வரக்கூடும்.

## தோட்டக்குப்பை எரு.

தோட்டக் குப்பை எருவானது ஆடுமாடுகளின் சாணி, மூத்திரங்கள் இவைகளோடு தோட்டக்குப்பைகளும், இதர கழிவு வஸ்துக்



களும் சேர்க்கப்பட்டுத் தயாரிக்கப்படுகிறது ஜனத்தொகையின் விருத்தி மேலுக்கு மேல் அதிகமாக ஏற்படுகிறபடியாலும், காட்டுப் பிரதேசங்கள் வர வர குறைந்து போய்க்கொண்டிருப்பதாலும், விறகு அகப்படுகிறது கஷ்டத்தில் வந்துவிட்டிருக்கிறது. ஆகையால், ஜனங்கள் மாட்டுச்சாணியை விராட்டி செய்வதில் அதிகமாக உபயோகிக்கிறார்கள். மாட்டுச்சாணியானது, மேல்சொன்ன காரணத்தினால் எருவிற்கு வேண்டிய அளவில் அகப்படுகிறதில்லை. மாட்டுச்சாணியில் நைட்ரோஜன் இருப்பதால், அது எருவிற்கு அவசியமான வஸ்து. ஆகையால், சாணி அகப்படாமையால், தோட்டக்குப்பை எரு பலங்குறைவையடைகிறது. புண்ணாக்குகள், எலும்பு முதலியவைகள், சாணிக்குப்பதிலாக உபயோகப் படுத்தப்படக்கூடும். ஆனபோதிலும், அவைகள் சாணியைப்போல் அவ்வளவு திறமான எருக்களல்ல. ஆகவே, பங்காள கவர்மெண்டார் தோட்டக்குப்பை எருவை வேறு விதமாகச்செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். மாட்டு மூத்திரங்களும், கொட்டில்களை அலம்பிப்பெருக்கி ஏற்பட்ட அசுத்த நீரும் வீண் போகாமல் ஒரு குழியில் கொட்டி வைக்கப்பட்டு அதில் எலும்புத்தூள் சேர்க்கப்படுகிறது. பூண்டுகளும் பச்சைகளும், கரும்புச்சக்கைகளும், வைக்கோல் செத்தைகளும் கூட சேர்க்கப்படுகின்றன. அப்படிச்சேர்க்கப்படும்பொழுது, அவைகள் நொருங்கிப்போய் ஒன்று சேர்ந்து சாணியைப்போல் அமைகின்றன. இன்னும் இரண்டுவிதமாக சாணி எருவைப்போன்ற எரு தயாரிக்கப்படுகிறதாம். அதாவது எலும்புத்தூளைச்சேர்த்தும் சேர்க்காமலும் அமமோனியம சல்பேட்டை உபயோகிப்பதொன்று, சாணியோடு 20 மடங்கு ஜலத்தைச் சேர்த்து உபயோகிப்பது மற்றொன்று. கடைசியாகச் சொல்லப்பட்ட எரு வெகு திறமான பயன்களையுண்டாக்குகிறதாம். அம்மோனியம் சல்பேட்டை எலும்புத்தூளோடு சேர்த்து உபயோகிப்பதைவிட அம்மோனியம் பாஸ்பேட்டையே உபயோகிப்பது மேலான வழியென்றும் கண்டு பிடிக்கப்பட்டது. மேற்சொல்லிய எருக்கள் உபயோகப்படுத்தப்பட்டதில் பயிர்கள் நன்றாய் வளர்ந்துவந்து பயன்களைக் கொடுத்தன. இதர மாஹாணங்களிலும் இவ்வழிகள் பின்பற்றப் படுகின்றன.

## பிரிட்டிஷ் இராஜ்ய காட்டு விஷய கன்பரன்சு.

நாம் முன் சஞ்சிகையில், ஆஸ்டிரேலியாவில் மூன்றாவது எம்பயர் காட்டு விஷயக் கன்பரன்சு நடக்கப் போகிறதென்று சொல்லி

யிருக்கிறோம். இக்கன்பரன்சுகளின் நோக்கமானது காடுகள் அழிக்கப்படாமல், விருத்திசெய்யப்பட வேண்டும் என்பது. தற்காலத்தில் எல்லாத் தேசங்களிலும் ஜனத்தொகை அதிகப்பட்டுவருவதால் சாகுபடிக்கு வேண்டிய நிலங்களின் நிமித்தம் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. மனிதர்கள் மேல்பட்ட நாகரீகங்களைக் கொண்டாடத் தொடங்குவதால் அவர்களுக்கு தச்சு வேலைகளுக்கும், கட்டிட வேலைகளுக்கும் வேண்டிய மரங்களின் நிமித்தமும் காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகளிருந்தால்தான் மழை சரியாகப் பெய்யும், வியவஸாயம் சரிவர நடக்கும், சுகாதார நிலை சரியாய் அமையும், என்கிற விஷயங்கள் இன்னும் அநேகரால் அறியப்படவில்லை. மேலும், காடுகள் நன்றாக ஓங்கி வளர்ந்தால் அவைகளிலுள்ள கட்டிட வேலைக்கு உபயோகமான விருக்ஷங்கள் அளவில்லாத மூலதனமாக ஏற்படக்கூடும்,

தேசங்களொவ்வொன்றும் அதனுடைய காட்டுப் பிரதேச விஸ்தீர்ணங்களைப்பற்றியும், அவைகளிலிருந்து உண்டாகும் வருமானங்களைப்பற்றியும், அவைகள் தற்காலத்தில் எவ்விதமாகவும் எந்த அளவிலும் உபயோகப்படுகின்றன வென்பதைப் பற்றியும், அவைகள் பின்காலத்தில் எவ்விதங்களிலும் எவ்வளவிலும் உபயோகப்படக்கூடு மென்பதைப்பற்றியும் விவரங்களைக் கன்பரன்ஸில் சொல்லப்போகின்றன. இந்தியாவானது ஏராளமான காட்டு விஸ்தீர்ணங்களையுடைய தேசம். இந்தியாவிற்காக 7 பிரதிநிதிகள் கன்பரன்சுக்குச் செல்லுகிறார்கள். அவர்களு சீப் கன்ஸர்வேடராகிய மிஸ்டர் ஆர். டப்ளியூ. ரிச்சு மண்டு ஒருவர். கன்பரன்சார் பாரெஸ்டு அபிவிருத்தி விஷயமாய் சிறந்த யோசனைகளைச் சொல்வார்களென்பதில் சந்தேகமே யில்லை கன்பரன்ஸின் நடவடிக்கைகளை ஆவலுடன் எதிர்ப் பார்க்கிறோம்.

## கிராமத் தோப்புகள்.

சிடல்ட்ருக் ஜில்லாக் கன்பரன்ஸில் அக்ராஸனம் வகித்த டிப்டி கமிஷனரவர்கள் அக்ராஸன மொழியில் இத்தன்மையாக மொழிந்தார்:—

நம்முடையக் கிராமப் பிரதேசங்கள் தோப்புக்களை யுடைத்தாயில்லாமல் பார்வைக்கு விகாரமாக விருக்கின்றன. ரஸ்தாக்களின்



ஓரங்களில் விருக்ஷங்களே யில்லை. வெய்யலின் தாபத்தினால் பாட்டைசாரிகள் கஷ்டப்படுகிறார்கள். வயல்களில் நாகதாளி வளர்ந்து அடைந்துகொண் டிருக்கிறது. அநேகவித நன்மைகளை யுத்தேசித்து விருக்ஷங்களை நடுவதை ஜனங்கள் ஆரம்பிக்கவேண்டும். சில வருஷங்களாக இவ்வித வேலை அநுஷ்டிக்கப்பட்டதில் 241 கிராமத் தோப்புகள் உண்டாயின, 1640விருக்ஷங்களும் ரஸ்தாக்களில் நடப்பட்டன. விருக்ஷங்களை நட்டால் மாத்திரமே போதாது. அவைகளைப் பாதுகாத்து வளர்க்கவேண்டும். கிராமங்களில் உபாத்தியாயர்களும், மாணவர்களும் இவ்வித வேலையில் ருசியை வகித்து தோட்டங்களையும், உத்தியானங்களையும் வைக்க ஆரம்பிக்கவேண்டும். கிராமப் பஞ்சாயத்துகளும், ஜில்லா போர்டுகளும் இவ்வேலையில் சிரத்தையை எடுத்துக் கொண்டு அவர்களுக்கு ஒத்தாசைகளைச் செய்யவேண்டும். கிராமப் பஞ்சாயத்துகள் கிராமச் சாவடிகளைச் சுற்றியும் தெரு ஓரங்களிலும் விருக்ஷங்களை நட்டுப் பயிர் செய்யவேண்டும். பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளுக்கு இவ்வித வேலையைச் செய்ய சௌகரியங்களிருக்கின்றமையால் அவைகள் அதிகசிரத்தையுடன் இவ்வேலையைக் கைப்பற்றவேண்டும். மார்கோபோலோ என்கிற இத்தாலியர் தன்னுடைய உலக சுற்றுப்பிரயாண வரலாற்றில் 12ஆம் நூற்றாண்டில் சீனாவில் குபளாய்கான் என்ற பெயரை வகித்த மஹாமன்னர் அந்தேசத்திய ரஸ்தாக்களில் விருக்ஷங்களை நட்டு வளர்த்தாரென்றும் அப்படி ரஸ்தாக்களில் விருக்ஷங்களை நடுவோர்கள் தீர்க்காயுளை வகிப்பார்களென்றுங் கூறினாரென்றும் வரைந்திருக்கிறார்.

## மனிதர்களின் அறிவின் அளவுகளைச்சோதிப்பது.

மனிதன் சுபாவத்திலேயே புத்திசாலியாகவிருந்தால் அவன் அதிகக்கல்வியினால் அடையக்கூடிய புத்தி கூர்மையை வகிக்கிறான்.

ஆங்கிலத்தில் அறிவு என்கிற பதத்திற்கு 'இண்டெலிஜன்சு' என்பது மொழி. போவர்யுத்த காலத்தில் பார்லிமெண்டில் மந்திரிகளிலொருவர் உபந்நியாஸம் செய்ய ஆரம்பிக்கும்பொழுது "நம்முடைய இராணுவ இலாகாவின் ஆபீசுக்கு இண்டெலிஜன்சு வந்திருக்கிறது" என்று மொழிந்தார். இவ்வார்த்தைகளை அவர் சொல்லி முடிப்பதற்கு முன்னமே சபையிலிருந்தவர்கள் அனைவரும் நகைத்தார்கள். மீதிவார்த்தைகளும் அந்நகைப்பில் அமுங்கி விட்டன. மந்திரியவர்கள் இண்டெலிஜன்சு என்கிற பதத்தை சமாசாரம் என்கிற

அர்த்தத்தில் உபயோகித்திருக்கையில், சபையார் அதை அறிவு என்கிற அர்த்தத்திலெடுத்துக்கொண்டு மந்திரியின் மொழிவானது "இராணுவ இலாகாவின் ஆபீசுக்கு புத்திவந்திருக்கிறது" என்று விளக்குவதாக வைத்துக்கொண்டு நகைத்தார்கள். சபையார் எடுத்துக்கொண்ட அர்த்தப்படி இன்டெலிஜன்ஸ் என்கிற மொழிக்கு சரியான அர்த்தம். அறிவு யென்பது படிப்பினாலும் உபதேசத்தினாலும் ஏற்படக்கூடியதல்ல. அது மனிதனுக்கு பிறக்கும்பொழுதே ஏற்படுகிறது.

ஆகவே, ஒவ்வொருவரும் அறிவை யுடைத்தா யிருக்கிறார்கள். சிலருக்கு அதிக அறிவு இருக்கிறது. சிலருக்கு குறைவான அறிவு இருக்கிறது. அதேயொழிய, அறிவே யில்லாத மனிதனே கிடையாது. மனிதனுடைய அறிவை அளந்து இவ்வளவென்று சொல்லக்கூடும். அமெரிக்கர்கள் அந்நிய தேசத்துக் கூலியாட்களை வியவஸாயத்திலோ, இதர தொழில்களிலோ, வேலையில் வைத்துக்கொள்ளும்பொழுது அக் கூலியாட்களின் அறிவின் அளவுகளைப் பரிசோதித்து அறிகிறார்கள். அப்படிப் பரிசோதனைகளை நடத்துவதால் அவர்கள் அறிவில்குறைந்தவர்களைத் தள்ளிவிடுகிறார்கள். மஹா யுத்தகாலத்தில் சைநியத்திற்கு ஆட்களைச் சேர்க்கும்பொழுது, அறிவுச் சோதனைகள் அநுஷ்டிக்கப்பட்டன. கல்வி விஷயத்திலும், தொழில் விஷயத்திலும், வியாபாரத்திலும் அறிவின் அளவு சம்பந்தமான சோதனைகள் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. பிரான்சு தேசத்திய மனது சாஸ்திர நிபுணராகிய ஆல் பிரெட் பினே என்பவர் இவ்வித சோதனைகளைக் கண்டு பிடித்து உபயோகத்திற்குக் கொண்டு வந்தார்.

வெகு நாள்கள் வரையில் அறிவின் அளவை நபரின் தலையின் பரிமாணத்தினால் அறிந்து வந்தார்கள். இவ்விதச் சோதனையால் பயன் ஏற்படவில்லை. பெரிய தலையை வஹித்தவனுக்கு அறிவுகுறைவும், சிரிய தலையை வஹித்தவனுக்கு அதிக அறிவும் சில நபர்களில் காணப்பட்டமையால் அவ்விதச் சோதனையானது கைவிடப்பட்டது. அதுமுதல், முன்காலத்திற்போலவே, புத்தியை யுபயோகித்துப் பதில்களைச் சொல்லும்படியான கேள்விகள் மனிதர்களுக்குப் போடப்பட்டு அவர்கள் அவைகளுக்குக் கொடுக்கிற பதில்களின் மூலமாக அவர்களின் அறிவுகளின் அளவுகள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. ஒரு கேள்விக்குப் பதிலைக்கொண்டே ஒருவனின் அறிவின்



அளவை அறிய முடியாது. பல கேள்விகள் பிரயோகிக்கப்படவேண்டும். கேள்விகள் இப்படிப்பட்டவைகளாக யிருக்கவேண்டும்;— "ராமன், கிருஷ்ணன் இரண்டு வருஷங்களுக்கு முன்னே என்னவயதாகவிருந்தானோ அதே வயதாகவிருக்கிறான். யார் இதில் பெரியவன்?" அமெரிக்காவில் இராணுவ இலாகா அறிவுச்சோதனைக்காகவே கேள்விகளைப்பிரயோகிக்கிறார்களாம். அந்தனை கேள்விகளும் பரீக்ஷிக்கப்படும் நபர்களால் அரை மணி சாவகாசத்திற்குள் பதிலளிக்கப்படவேண்டுமாம். அறிவைச் சோதனை செய்யப் பிரயோகிக்கப்படுகிற கேள்விகள் இவ்விதங்களாகவுமிருக்கக்கூடும்: "காட்டிலே முயல் ஓடினால் அது எவ்வளவு தூரம் ஓடும்" "காட்டில் முயல் ஓடினால் அது காட்டின் மத்திய பாகம் வரையில் தான் செல்லும்; பிறகு வந்த வழியே திரும்பிவிடும்." என்ற பதிலை எல்லாரும் கொடுக்கமாட்டார்கள். இன்னொரு விதக்கேள்வியானது. "நான் தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்துக் கொண்டால் சனிக்கிழமையை அதற்காக ஏற்படுத்தி அப்படிச் செய்து கொள்ளமாட்டேன். ஏனென்றால் சனிக்கிழமை கெட்ட நாளாகையால் எனக்குக் கெடுதி நேரிடும் இதில் மூடத்தன மொழிவு எது?" சாதாரணமாய் பிள்ளைகள் 12, 13 வயதாகிற வரையில் இவ்விதக்கேள்விகளுக்குச் சரியாகப்பதில் சொல்லமாட்டார்கள். ஆனபோதிலும், விசேஷ அளவில் அறிவை யுடைத்தான 10 வயதுப்பிள்ளை இதற்குச்சரியாய்ப்பதில் சொல்லுவான், அறிவை குறைவாயுடைத்தான பிள்ளை 15 வயதான வனாலும் சரியாய்ப்பதில் சொல்லவேமாட்டான்.

சிரிய பிள்ளைகளுக்கு இவ்விதக் கேள்விகளைப் பிரயோகிக்கக் கூடும். "காப்டேன் குக் என்பவர் உலகத்தைச் சுற்றி மூன்று தடவைப்பிரயாணம் செய்தார். அதில் ஒன்றில் அவர் இறந்தார். எந்தப் பிரயாணத்தில் அவர் இறந்தார்? முதல்பிரயாணத்திலா, இரண்டாவதிலா, மூன்றாவதிலா? 8 வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள் இதற்கு சரிவர பதில்சொல்ல முடியாது. அறிவானது மனிதர்களுக்கு வயதாக வயதாக 18 வயதுவரையில் மாத்திரம்தான் உயர்கிறது. அது வயதிற்கேற்றவாறு வளர்கிறது.

---

## வர்த்தமானக் குறிப்பு

பர்லாகிமெடி ராஜா அவர்கள் ராயல்கமிஷனில் அங்கத்தினராக அடைந்த அலவன்சு பணமாகிய 20,000 ரூபாயை பொது உபயோகத்திற்கு வைத்திருக்கிறார். வியவஸாய இலாகாவில் 5 வருஷங்களுக்குக்குறையாமல் சிரத்தையுடன் வேலை செய்த சிப்பந்திகள் விசேஷ வியவஸாய ஞானத்தையடைவதில் அபேக்ஷகர்களாக இருந்தால், பூஸாவில் அவர்கள் போதனைகளை அடையவேண்டிய நிமித்தம் அவர்களுக்குப் பண உதவிக்காக நிதியாக வைத்திருக்கிறார்.

x x x x x

எங்கே பார்த்தாலும் கிராமப்பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகள் செய்யவேண்டிய வேலைகளைப் பற்றியும், கடமைகளைப் பற்றியும், அவைகள் எந்த நோக்கங்களுடன், ஏற்படுத்தப்பட்டனவென்பதைப் பற்றியும், அவைகள் போதனைகளை யடைந்தாலொழிய, அவைகள் சரிவரவேலை செய்யமாட்டா. மத்தியமாகாணங்களில் அகோலாவில் பீரார் பஞ்சாயத்து போர்டாரால் ஒரு போதனை சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில், கூட்டுறவு, கிராமச் சுகாதாரம், இவைகளில் போதனைகள் நடத்தப்படுகின்றன. நம்முடைய மாகாணத்திய ரிஜிஸ்டிரார் ஜனரல் அவர்களும் இம்மாதிரி போதனைசாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கோருகிறோம்.

பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளும் மேற்சொன்ன விஷயங்களில் போதிக்கப்படவேண்டும். அதோடுகூட, அவைகள் பஞ்சாயத்துக் காடுகளின் அபிவிருத்தி விஷயங்களிலும், காடுவளர்ப்பு, நிர்வாகம் இவைகளின் சம்பந்தமான விஷயங்களிலும் போதிக்கப்படவேண்டும். ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு தகுந்த கிராமத்தில், வருஷத்தில் குறிப்பிட்ட காலத்தில் போதனைசாலை வைக்கப்பட்டு பஞ்சாயத்தார்களும், அவர்களின் ஊழியர்களும் கற்பிக்கப்படவேண்டும். போதனைகள் அனுபவம் வாய்ந்த பாரெஸ்டு ரேஞ்சர்களைக்கொண்டு நடத்தப்படவேண்டும். பாரெஸ்டுப் பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்களும் போதனைகளை கவனிக்கவேண்டும். வியவஸாய வழிகளிலும போதனைகள் செய்யப்படவேண்டும். மேய்ச்சலுக்காக புல் வளர்ப்பு வழிகளி



லும், மேய்ச்சல் பூமிகளை ஆதரித்து நிர்வகிக்கிற வழிகளிலும் போதனைகள் செய்யப்படவேண்டும்.

x x x x x

இந்தியன் எகனமிக் அஸோஸியேஷன் என்கிற சங்கத்தார் மீடிங்குகூடி வியவஸாய விசாரணை சபையின் ரிபோர்ட்டைப்பற்றி விவாதித்துப்பேசினார்கள். மிஸ்டர் டி. இரங்காச்சாரி சீ. ஐ. ஈ. அவர்கள் அக்ராஸனம் வகித்தார். மிஸ்டர் ர. வி. சுந்தர ரெட்டி அவர்கள் ரிபோர்ட்டில் சில அம்சங்களைப்பற்றி தன்னுடைய விவாதத்தைத்தொடங்கினார். பின்பு, அக்ராஸனரும், யூனிவர்சிடி புரொபெசர் டி. கே. துரைசாமி ஐயர் அவர்களும், மாகாணக் கூட்டுறவு ஐக்கியத்தின் அக்ராசனரான கனம். ராம்தாஸ்பந்துலு அவர்களும், யூனிவர்ஸிடி ரீடர் கே. சி. ராமகிருஷ்ணன் அவர்களும், “ரூரல் இந்தியா” பத்திராசிரியர் ஏ. சுவாமிநாத ஐயர் அவர்களும் பேசினார்கள்.

x. x x x x

திவான்பகதூர் ஆர். ராமச்சந்திரராவ் ஸி. எஸ். ஐ. அவர்கள் கூட்டுறவு ஸம்பந்தமாக கிராமங்களில் சில முயர்ச்சிகளை உண்டாக்க நோக்கங் கொண்டு வேலையை ஆரம்பித்திருக்கிறார். இம்முயர்ச்சிகளின் நோக்கமானது ஜில்லாபாங்கினால் கொடுக்கப்படும் கடன் பணங்களுக்கு நஷ்டம் வராமலிருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டியது ஒன்று. தவிர, கிராமஜனங்களிற்கு எல்லாவித முயர்ச்சிகளுக்கும் கிராமச்சங்கங்கள் உபயோகப்பட வேண்டுமாம். மேலும், பயிர்த்தொழிலுடன் அவர்கள் சகாயத் தொழில்களை அப்பியஸிக்க வேண்டிய வழிகளில் அச்சங்கங்கள் அநுகூலிக்கவேண்டுமாம். அவைகள் ரீடிங்கு ரூம்களையும் உண்டாக்கவேண்டுமாம். பஜனை கோஷ்டிகளையும் ஏற்படுத்தி பஜனைகளையும் நடத்த வேண்டுமாம். ஒரு வருஷத்திற்குப் பிறகு மிஸ்டர். ராமச்சந்திரராவ் அவர்கள் இவைகளின் வேலைகளைப்பற்றி நம்முடைய பத்திரிகையில் எழுதுவதாகச் சொல்லியிருக்கிறார்.

x x x x x

சென்னை ஓய். எம். சீ. ஏ. யில் நடைபெற்ற ரூரல் எடுகேஷனல் கன்பரன்ஸில், நமது மாஹாண வியவஸாய இலாகாத்தலைவராகிய மிஸ்டர் ஆர். டி. அன்ஸ்டெட் ஸீ. ஐ. ஈ. அவர்கள் வியவஸாய விசாரணையின் ரிபோர்டில் கூறப்பட்ட கிராம ஜனக்கல்வி சம்பந்தமான யோஜனைகளைப்பற்றி உபந்நியாஸம் செய்தார். அவருடைய உபந்நியாசத்தின் முக்கிய பாகங்கள் நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். சீக்கிரத்தில், அபிவிருத்தி மந்திரி அவர்களும், கூட்டுறவு சங்க இலாகாத் தலைவரும், வியவசாய இலாகாத்தலைவரும், மாட்டு வைத்திய இலாகாத் தலைவரும் மீடிங்கு கூடி வியவஸாய விசாரணை சபையின் ரிபோர்டில் அடங்கிய யோஜனைகளைப் பற்றி ஆலோசிக்கப் போகிறார்களாம். அகில இந்தியா கன்பரன்சு ஒன்று அக்டோபர் மாதத்தில் டெல்ஹியில் இது சம்பந்தமாக நடக்கப்போகிறதாம். எல்லா மாஹாண கவர்மெண்டிலிருந்தும் இலாகாக்களின் பிரதிநிதிகள் அதற்குச் செல்வார்களாம்.

x x x x x

செங்கல்பட்டு ஜில்லா போர்டார் 1927ம் வருஷத்தில் கிராமச் சீரமைப்பு முயர்ச்சிகளை ஆரம்பித்தார்கள். சைதாப்பேட்டை தாலூகாவில் வில்லிவாக்கம் பிர்காவிலும், செங்கல்பட்டு தாலூகாவில் உத்திரமேரூர் பிர்காவிலும், திருவள்ளூர் தாலூகாவில் கன்னிகைப்பேர் பிர்காவிலும் வேலையைத் தொடங்கினார்கள். 64 கிராமப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டன. வில்லிவாக்கம் பிர்காவில் ஒரு ஸர்க்கில் பஞ்சாயத்து சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இந்த மூன்று பிர்காக்களின் பிரதான கிராமங்களில் ஆயுர்வேத வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு பிர்காவிற்கும் இரண்டு பட்டம் பெற்ற மிட்வைபுகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் கிராமங்களிற்குச்சென்று வீடு வீடாய்ப் போய்ப்பார்க்கிறார்கள். கிராமங்களில் பிரசவகால சமயமாயுள்ள கர்பிணிகளின் சம்பந்தமாய் ஒரு ரிஜிஸ்டரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிரஸவங்களில் ஆஜராயிருந்து மருத்துவ வேலைகளைச் செய்கிறார்கள். மேலும், சிறு குழந்தைகளின் நோய்களுக்குச் சிகிச்சையைச் செய்கிறார்கள்.

ஜில்லா போர்டாரால் வண்டிபாட்டைகளின் நிமித்தம் செலவு திட்டத்தில் 62,420 ரூபாய் பகுக்கப்பட்டது. நல்ல ஜலத்தையுடைய குட்டைகளைச் சரியான ஸ்திதியில் வைப்பதற்கு முயர்ச்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 4 சினைக்காளைகள் இந்த மூன்று பிர்காக்களிலும் உபயோகத்திற்காக வாங்கப்பட்டன. கவர்மெண்டு சுகாதார இலாகாவானது சுகாதார விஷயங்களில் விளக்குபடக் காக்ஷிகளுடன் பிரச்சாரங்களைச்செய்தன. வியவஸாய இலாகாமாத்திரம் இம்மாதிரி நிரூபணங்களைக் காட்டாதது விசனிக்கத்தக்கது. இப்படி ஒரு வருஷமாக நடந்த முயர்ச்சிகளின் பயன்கள் ஜில்லா போர்டாரை ஜில்லாவின் மற்றபாகங்களில் கூட இம்முயர்ச்சிகளை நடத்தும்படி தைரியத்தைக் கொடுக்கக்கூடியது. செங்கல்பட்டு ஜில்லாபோர்டின் அக்ராஸனராகிய ம-ா-ா-ஸ்ரீ ராவ்பஹதூர் எம். கே. ரெட்டி அவர்களின் தேசபக்தியும் தேச சேவையும் வெகு உயர்வானவை. அவர் தேசோத்தாரண சம்பந்தமாக சிறந்த உணர்ச்சிகளைக் கைக்கொண்டு இப்படிப்பட்ட ஊழியத்தை நடத்திவருகிறார். இதைப்பார்த்தாவது, இதர ஜில்லா போர்ட்டுகளும், அக்ராசனர்களும் கிராமச்சீரமைப்பு முயர்ச்சிகளைக் கைக்கொள்வார்களாக!



x x x x x

மத்திய மாஹாணங்களில் தாலூகா வியவஸாய சங்கங்கள் மெம்பர்களை யேற்படுத்தி, நிதி யுண்டாக்கி, நவீன வியவஸாயக் கருவிகளையும், விரைகளையும், எருக்களையும் தருவித்து வியவஸாயிகளுக்கு விற்பனை செய்கின்றனவாம். இன்னும், அம்மாஹாணங்களில் பயிர்களைக்காப்பாற்றிக் கொள்வதற்காக, கிராப் புரொடெக்ஷன் ஸொஸைடிஸ் என்று சங்கங்கள் உண்டாயிருக்கின்றனவாம். பயிர்கள் திருட்டுப் போவதையும், ஆடுமாடுகளினால் நஷ்டமாவதையும் தடுப்பதின் பொருட்டு கூட்டுறவு வழியில் ஏகர் ஒன்றுக்கு 6 அணா வீதம் பணத்தை வசூலித்து காவல் காரர்களை ஏற்படுத்திப் பயிர்களை ரக்ஷிக்கின்றனவாம். இச்சங்கங்கள் ஏற்பட்ட பின்பு நஷ்டங்கள் குறைந்து விட்டனவாம். நம்முடைய மாஹாணத்தில் பயிர்கள்

கட்டுப்பன்றிகளால் அழிக்கப்படுகின்றன. இவ்விதச்சங்கங்கள் நம்முடைய மாஹாணத்தில் ஏற்பட்டால் மேற்சொல்லியமாதிரியான நஷ்டங்கள் தடுக்கப்படக்கூடும்.

மத்தியமாஹாணங்களில் வியவஸாய சங்கங்களின் பொதுச் சபை யொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம். இந்த ஏற்பாடு, தனிச்சங்கங்கள் தாங்கள் வாலாயமாக நடத்துகிற முறைகளையே யன்றி வேறு முறைகளையும் கூட அநுஷ்டிப்பதைத் தூண்டும்.

மேற்சொல்லிய வியவஸாயச்சங்கங்கள் மாகூல் விளைப்பதில் பந்தயங்களை யநுஷ்டிக்கின்றனவாம். பந்தயத்தில் சேரும் ஒவ்வொரு வியவஸாயியும் 10 ஏகராக்களில் பருத்தியைப் பயிர்செய்ய வேண்டுமாம். அதற்கு வேண்டிய விரைகளை வியவஸாயச் சங்கத்திலிருந்து அவன் வாங்கவேண்டுமாம். நிலத்தில் பருத்தியைத் தவிர இதரப்பயிர்களிருந்தால் அவைகளை அவன் எடுத்துவிட வேண்டுமாம். விளைந்த பருத்தியை சங்கத்திற்கு அவன் விற்று விடவேண்டுமாம். இப்பந்தய ஏற்பாடானது அதிக அளவு உற்பத்தியின் பொருட்டு வியவஸாயிகளைப் பாடுபடும்படிச் செய்யக் கூடியது.

x x x x x

கிராமங்களில் ஏறிக்கரைகள் புறம்போக்குகள், நத்தங்கள், பாட்டைகள், சாகுபடி செய்யப்படாத நிலங்கள், இவைகளெல்லாம் நாகதாளியடர்ந்திருக்கின்றன. அக்காரணத்தினால் மனிதர்களுக்கும் ஆடு மாடுகளுக்கும் அபாயங்கள் ஏற்படுகின்றன. ரெவினியூ உத்தியோகஸ்தர்களும் லோகல் போர்டுகளும் இதுசம்பந்தமாக தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ளுகிறதில்லை. சென்னை ஐகோர்டார்



ஒரு தீர்மானத்தில் நாகதாளியை அழிப்பதின் நிமித்தம் அதுவளர்ந்திருக்கிற நிலத்தின் சொந்தக்காரனே பாத்தியப்பட்டவனென்றும், பொது ஜனங்களில் யாராகிலும் அவனை பிராஸிக்யூட் செய்யலாமென்றும், நாகதாளி நிலத்திலிருந்தால் அதை அழிக்க வேண்டியதானது நிலச்சொந்தக்காரனின் அவசியமான கடமையென்றும், அக்கடமையை யவன் கவனிக்காமலிருந்தால் அவன் தண்டனைக்குள்ளாவானென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

x x x x x

பிரான்சு தேசத்தில் பள்ளிக்கூடப் பிள்ளைகளிற்குக்கூட கூட்டுறவு உணர்ச்சிகள் எட்டியிருக்கின்றன. அவ்வுணர்ச்சிகளால் நல்ல ஒழுக்கம் ஏற்படுகிறது, அவர்கள் சமூக நன்மைக்கான உழைப்பையும் கைக்கொள்ளுகிறார்கள், அவர்கள் அவர்களுடைய அல்ப வேலைகளைக்கூட ஒழுங்காகச்செய்கிறார்கள். பிள்ளைகள் கூட்டுறவு சங்கங்களை வைத்துக்கொண்டு அவைகளின் பணங்களை சரிவரப்பாதுகாத்து, வியவஹாரங்களை அநுஷ்டிக்கிறார்கள். இவ்விதமாக வரிவிதிக்கும் வழியிலும், சட்டநிரூபண விஷயங்களிலும், இன்னும் இதரமான பிராஜாதர்ம விஷயங்களிலும் பயிர்ச்சியை அடைவதுடன், அவர்கள் கல்வி சம்பந்தமாகவும் அதிகமான உற்சாகத்தையும் முயற்சியையும் வஹிக்கிறார்கள்.

## எங்கே ப்ளேகெங்கே, ப்ளேகில்லவேயில்லை.

நாம் சொல்லும் பிரகாரம் ஹைமாதிபானத்தை அனுதினமும்
உபயோகப்படுத்தினால் ப்ளேக் ஜ்வரம், ப்ளேக
கட்டிகள் கூட கிட்ட நாடமாட்டாது.

குளிர்ஜ்வரம், முறைக்காய்ச்சல் ஜன்னியோடு,
உண்டாகும் ஜ்வரம் முதலான எல்லாவித
ஜ்வரங்களுக்கு ராமபாணம்

### எங்கள் ப்ளேக் மருந்துகளுக்கு முக்கிய பிரசித்தி

இண்டியா, பர்மா, சிலோன், ஏடன் முதலிய இடங்களில்
30 வருஷமாய் அநேக ஆயிரம் பிராணிகள்
ப்ளேகிலிருந்து காப்பாற்றப்படுவதே.

### ப்ளேக் ஜ்வரத்திற்கும் ப்ளேக் கட்டிகளுக்கும்

ஹைமாதிபானமும் (ரிஜிஸ்டர்டு) அண்டு சதமெளதங்களும்

| | | |
|---|---|---|
| விலை | பெரியசெட் | 1-க்கு 2—2—0 |
| | சிறியசெட் | 1—6—0 |

பாக்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம்
கோருகிறவர்களுக்கு எங்கள் கேட்லாக்கு
இனமாக அனுப்பப்படும்.

### வைத்யரத்ன. பண்டித டி. கோபாலாசார்லு அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட

ஆயுர்வேத ஆசிரமம்
251, கோவிந்தப்ப நாயகன் வீதி, மதராஸ்

தந்திவிலாசம் "பண்டிட்" — டெலிபோன் ந. 287, மதராஸ்

ம... ஏஜண்டுகள் தேவை

199375

# இந்திய விவசாயம்.

— : (o) : —

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும்முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு, கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சிராப்பள்ளி.

---

## TALISMANS & CHARMS

For those People to avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life

| | | |
|---|---|---|
| For Honour, Riches Learning and Greatness. | Rs. | 7 8 |
| For Health, physical Strength etc. | ... | 7 8 |
| For Power of Eloquence, Speeches, etc. | ... | 7 8 |
| For Success in any Undertaking or Litigation etc, | .... | 10 0 |
| For success in Sport Racing, Cards, games of Chance etc,, | | 7 8 |
| For Success in spiritual and Religious Life | ... | 10 0 |
| For Success in Trade and Business | ... | 10 0 |
| For Agricultural prosperity Farming, Good Crops etc,, | | 7 8 |
| For Success in Mining Plumbago, etc. | ... | 100 0 |
| For Success in Gemming | ... | 225 0 |
| Reabbi Solomon's Special Talisman for every Success | | 15 0 |
| Specially valued and worn by every successful Hebrew, 2nd quality | | 21 0 |
| Do, 1st quality | | 30 0 |

*NOTE— A Money Order or G, C, Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs, 15, two, Rs, 25, three, Rs, 30 or more at a time at Rs, 10 per reading, Remit with birth date, Always the full amount should be remitted in advance, No V. P. P.*

*Apply to*:—D. A. RAM DUTH.

*Astrologer, No. 30 and 55, (I. E.)* Cheku Street, Colombo CEYLON.

# AMRUTANJAN

## A MAGIC CURE FOR

RHEUMATISM
LUMBAGO
HEADACHE
STIFF JOINTS




SPRAINS
COUGH, COLD
NEURALGIA
SWELLINGS

*and All Aches & Pains*

**Price 10 As a pot.**

*Amrutanjan Depot*

**Bombay** & **Madras**


*Publishe by* MR A. RAJAGOPAL REDDI, President Forest Panchayatdars Union Ltd, Madras *Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS CHINGLEPUT*